Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 14 (29-12-1992) செவ்வாய்க்கிழமை ஓசை 315

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க முடிவு

பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சியைப் பின்பற்றத் தவறியவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு கல்விச் சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கையெடுக்க இருக்கிறது. பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் போக்குவரத்துச் சிரமங்கள் காரணமாக பயிற்சி நெறியைப் பின்பற்றத்தவறிவிட்டனர். வேறு சிலர் பயிற்சிநெறியைப் பின்பற்றுவதற்கான அனுமதிக் கடிதம் உரிய காலத்தில் கிடைக்காததினால் பயிற்சி நெறிக்குச் செல்லவில்லை. இவ்வாறாக சுமார் 70 பேர் மேற்படி சேவை முன் பயிற்சியைப் பின்பற்றத் (4ஆம் பக்கம் பார்க்க)

# புதிய போர் தந்திரோபாயங்களுடன்

# ஜனவரியில் தாக்குதல் ஆரம்பமாகும்

## தயாரிப்பில் ராணுவம் தீவிரம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புதிய போர் தந்திரோபாயங்களுடன் கூடிய தாக்குதல் நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பாரிய உயிர்ச்சேதத்தை விளைவிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இத்தாக்குதல் திட்டத்திற்கு ஏற்றவகையில் தயாரிப்புவேலையில் இராணுவம் தீவிரமாக இறங்கியுள்ளதாகவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இவ் வருடம் இராணுவத்தினருக்குப் போர்முனைகளில் ஏற்பட்ட பாரிய உயிரிழப்பைத் தொடர்ந்து நடைமுறையில் இருந்த இராணுவ தந்திரோபாயம் கைவிடப்பட்டு புதிய தந்திரோபாயம் வகுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இப்புதிய திட்டம் கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன்வனசிங்கா தலைமையிலான குழுவே தயாரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

புதிய இத்தாக்குதல் திட்டமானது இராணுவத்தினரின் உயிரிழப்பை குறைக்கத்தக்க வகையில், விடுதலைப் புலிகளுக்கு பாரிய உயிரிழப்பை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[4-ம் பக்கம் பார்க்க]

## மீட்பு நிதி சேகரிப்பு நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு எதிர்வரும்மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றி அரசன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், காரைநகர், வேலணை, நல்லூர், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு காலை 8.30 மணி தொடக்கம் 10.00 மணிவரை கோப்பாய் மகா வித்தியாலயம் (கோப்பாய்ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாக) இருபாலை வீதி, கோப்பாய்

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு காலை10.30 மணி தொடக்கம் 12.00 மணிவரை மெமோறியல் கல்லூரி மானிப்பாய்.

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவிஅரசாங்க அதிபர்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## ‘குவேக்கஸ்’ குழுவினர் மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

குவேக்கஸ் சமாதான அமைப்பின் சில முக்கிய அதிகாரிகள் மட்டக்களப்பிற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இக்குழுவில்இனச் சமாதானப் பணிகளில் ஈடுபட்டு வரும் குவேக்கஸ்சமாதான நிறுவனத்தைச் சேர்ந்த பல நாட்டுப் பிரதிநிதிகளும் அடங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. குவேக்கஸ் சமாதானக் குழுவினர் மட்டக்களப்பில் சில காலம் தங்கியிருப்பர் எனவும், மட்டக்களப்பிலுள்ள சமாதானக் குழு உட்பட பல்வேறு பொது அமைப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச இருப்பதாகக் கூறப்படுகிறது.

## பருத்தித்துறை வெளிச்சவீடு அருத்தவாரம் திருத்தவேலை

(வடமராட்சி)

கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுவரும் பருத்தித்துறை முனைப் பகுதியில் உள்ள வெளிச்சவீடு திருத்த வேலைகள் அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அண்மையில் யாழ் மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்த போருட் வதிவிட பிரதிநிதி வெளிச்சவீட்டை பார்வையிட்ட பின்னர் திருத்த வேலைக்கெனஒன்றரை இலட்சம் ரூபா நிதியை ஒதுக்க முன்வந்துள்ளார்.

வடமராட்சி போருட் நிறுவனத்தினர் அடுத்தவாரம் முதல் மேற்குறித்த திருத்த வேலைகளை மேற்கொள்வர். எனத் தெரிவிக்கப்படுகிறது.

(யோ)

## ஜேர்மன் விபத்தில் யாழ். வாசி பலி

(கொழும்பு)

ஜேர்மனியில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற விபத்தொன்றில் வடலியடைப்பு அரசடிறோட்டைச் சேர்ந்த துரையப்பா யோகேஸ்வரன் என்பவர் பலியானார் என தெரியவருகிறது.

## யாழ். மாவட்ட மாணவருக்கு போதுமான சீருடைத் துணி அனுப்பிவைக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

சென்ற வாரம் ''குமண'' கப்பல் மூலம் யாழ். குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட இலவசச் சீருடைத் துணிகள் மாணவர்களின் எண்ணிக்கைக்குப் போதுமான அளவு அனுப்பி வைக்கப்படவில்லை என தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டில் சுமார் 2இலட்சம் மாணவர்கள் சீருடைத்துணி பெறுவதற்கு தகுதி உடையவர்களாக காணப்பட்ட போதிலும் அரசு இவர்களுக்கு போதுமான அளவு சீருடைத்துணிகளை அனுப்பிவைக்கவில்லை என தெரியவருகின்றது.

இது சம்பந்தமான கணக்கு விபரங்களை யாழ். பிரதேச கல்விப்பணிமனை தயாரித்து வருகின்றது மேலும் தேவைப்படும் மிகுதி சீருடைத்துணிகளை அரசிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (பா)

## வீரச்சாவு



## டிமெல் வரவேற்புக் கூட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் பலி; 8 பேர் காயம்

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லை வரவேற்பதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தை தடுக்க பொலிசாரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் அச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததாகவும் எட்டுப்பேர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

முன்னாள் அமைச்சரை வரவேற்க புளத்சிங்கள தொகுதியிலிருக்கும் அவரது ஆதரவாளர்கள் பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்ததாகவும் அப்போது ஏற்பட்ட கலவரத்தை அடக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

புளத்சிங்கள தொகுதியில் நேற்று முன் தினம் மாலை பொதுக் கூட்டம் நடைபெற்ற போதே இக் கலவரம் நிகழ்ந்துள்ளது இச் சம்பவம் நடைபெற்ற போது ரொனிடி மெல் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கவில்லை என்றும் தெரியவருகிறது.

பட்டு புதிய தந்திரோபாயம் வகுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

புதிய இத்தாக்குதல் திட்ட

தாகவும் செய்திகள் தெரிவிக்

[4-ம் பக்கம் பார்க்க]

அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த வர்களுக்கு காலை 8.30 மணி

பள்ளி உதவிஅரசாங்க அதிபர்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

வடமராட்சி போருட் நிறுவனத்தினர் அடுத்தவாரம்

என்பவர் பலியானார் என தெரியவருகிறது.

## யாழ். மாவட்ட மாணவருக்கு

# போதுமான சீருடைத் துணி அனுப்பிவைக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

சென்ற வாரம் ''குமண'' கப்பல் மூலம் யாழ். குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட இலவசச் சீருடைத் துணிகள் மாணவர்களின் எண்ணிக்கைக்குப் போதுமான அளவு அனுப்பி வைக்கப்படவில்லை என தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டில் சுமார் 2இலட்சம் மாணவர்கள் சீருடைத்துணி பெறுவதற்கு தகுதி உடையவர்களாக காணப்பட்ட போதிலும் அரசு இவர்களுக்கு போதுமான அளவு சீருடைத்துணிகளை அனுப்பிவைக்கவில்லை என தெரியவருகின்றது.

இது சம்பந்தமான கணக்கு விபரங்களை யாழ். பிரதேச கல்விப்பணிமனை தயாரித்து வருகின்றது மேலும் தேவைப்படும் மிகுதி சீருடைத்துணிகளை அரசிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (பா)

# பாடப்புத்தகங்கள் விநியோகம் பற்றாக்குறையால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கான இரண்டாம்தொகுதி இலவசப் பாடப்புத்தகங்கள் வருவதில் தாமதநிலை உருவாகியுள்ளது என தெரியவருகின்றது.

ஏற்கனவே ''குமண'' கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு 7 லட்சத்து 50 ஆயிரம் இலவசப்பாடப்புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன மிகுதி 2 லட்சத்து 50 ஆயிரம் இலவசபாடப் புத்தகங்கள் வருவதிலேயே தாமதநிலை தோன்றியுள்ளது என யாழ். கல்வித்திணைக்கள வட்டாரத்தில் இருந்து அறிய முடிகின்றது.

இப்பாடப்புத்தகங்கள் அச்சிடுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதமே இந்நிலைக்கு காரணம் என அறியவருகிறது

இதனால் இலவசபாடப் புத்தக விநியோகத்தில் சீரின்மை ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# பரீட்சை வினாத்தாள்கள் எடுத்துச் செல்வதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

சென்றமாத முற்பகுதியில் நடைபெற்ற க. பொ. த. [சா/த] பரீட்சையின் விடைத்தாள்கள் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படாமல் தேங்கிக் கிடக்கும் நிலை உருவாகியுள்ளது என தெரியவருகின்றது.

கடந்த வாரம் இவ்விடைத்தாள்கள் அடங்கிய பொதிகள் கொழும்பிற்கு எடுத்துச் செல்வதற்காக பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு இதற்கென சிறிய கப்பலொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அக்கப்பலில் இவற்றை எடுத்துச் செல்வதில் சில இடையூறுகள் ஏற்பட்டதால் இவ் விடைத்தாள்கள் இக்கப்பலில் ஏற்றப்படவில்லை என்பது தெரிந்ததே. எனவே இவற்றைக் கொழும்பிற்கு எடுத்து வருவதற்கு பாதுகாப்பான கப்பலொன்றை ஒழுங்கு செய்து தரும்படி யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் பரீட்சை ஆணையாளரைக் கேட்டிருந்தார். இருந்தும் அதற்கான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகதெரியவரவில்லை இதனால் விடைத்தாள்களை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. [பா]

# உயர்தர பரீட்சை முடிவு விரைவில் பெற முயற்சி

(கொழும்பு)

நேற்று கொழும்பில் வெளியிடப்பட்ட கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை மிகவிரைவாக யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியுள்ளார் என தெரியவருகின்றது.

மேற்படி பெறுபேறுகளை மிக விரைவாக அனுப்பிவைக்கும்படி கோரி பரீட்சை ஆணையாளரிற்குவானொலிச் செய்தி ஒன்றையும் அவர் ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [பா]

## வீரச்சாவு



கப்டன மறைமகன (நிருபன்)



2 ம் லெப். கதிர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா செட்டிகுளம் முசல் குத்திப் பகுதியில் கடந்த 26-ம் திகதி காலை 10.00மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் கப்டன் மறைமகன் (நிருபன்) (இராசையா விஜயகுமார் – சாந்தசோலை, வவுனியா) வீரச்சாவடைந்தார்.

★ ★

நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தொன்றில் காயமடைந்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## படையினர் சூடு பெண் பலி

(மன்னார்)

பேசாலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பெண்மணி ஒருவரைச் சுட்டுக் கொன்றனர்.

நடுக்குடா பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களுக்கு அண்மையில் வைத்து காமலிற்றா ரஜனி (வயது33) என்பவரே இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

# டிமெல் வரவேற்புக் கூட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் பலி; 8 பேர் காயம்

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லை வரவேற்பதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தை தடுக்க பொலிசாரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் அச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததாகவும் எட்டுப்பேர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

முன்னாள் அமைச்சரை வரவேற்க புளத்சிங்கள தொகுதியிலிருக்கும் அவரது ஆதரவாளர்கள் பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்ததாகவும் அப்போது ஏற்பட்ட கலவரத்தை அடக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

புளத்சிங்கள தொகுதியில் நேற்று முன் தினம் மாலை பொதுக் கூட்டம் நடைபெற்ற போதே இக் கவரம் நிகழ்ந்துள்ளது இச் சம்பவம் நடைபெற்ற போது ரொனிடி மெல் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கவில்லை என்றும் தெரியவருகிறது.

# ஏப்பிரலில்ஜனாதிபதிதேர்தல் செய்திக்கு ஐ.தே.க மறுப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதி தேர்தல் இடம் பெறும் என்ற செய்தியை ஐ. தே. க. வின் உயர் வட்டாரங்கள் மறுத்துள்ளன.

1994 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்வரை ஜனாதிபதியின் பதவிக்காலம் உள்ளமையால் அதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடக்கும் சாத்தியத்தை இவ்வட்டாரங்கள் நிராகரித்தன.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடாத்தபபடுமானால் அது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி பிரேமதாச துரிதகதியில் ஆடைத்தொழிற்சாலைகளை துரிதமாக திறந்து வைப்பதனையும் எதிர்க்கட்சிகளிடையே பிளவு ஏற்பட்டுள்ளதையும் அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு செய்திகள் பரவியுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# களுத்துறைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று யாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பெயர் விபரங்களில் சில ஏற்கனவே வெளியாகியுள்ளன. இதுவரை வெளியிடப்படாத பெயர் விபரங்கள் வருமாறு:

நிக்ஷன் குருநகர், குமரையா அல்வாய். பிலோமிநாதன் பொலிகண்டி, ராஜேஸ்வரன் கெருடாவில். செல்வராசா கரவெட்டி. யோகலிங்கம் குப்பிளான். தேவதாசன் நவாலி, புவனேந்திரன் சுதுமலை வடக்கு, சிவபாதசிங்கம் யாழ்ப்பாணம், ஜேமிஸ் எடிஸ்ரன் கரவெட்டி மேற்கு, லோகநாதன் யாழ்ப்பாணம், கணேசலிங்கம் கொடிகாமம், செல்வமனோகரன் பொலிகண்டி. மதிவதனன் வல்வெட்டித்துறை. கண்ணதாசன் வல்வெட்டித்துறை, மோகன் வல்வெட்டித்துறை, ராஜா குருநகர், றொபேட் வின்ஷன் தயபசிட்டி. நிமால் குமார்

[4-ம் பக்கம் பார்க்க]

# வங்காலை தமிழர் வீடுகள் படையால் முற்றாக அழிப்பு

(மன்னார்)

வங்காலைப் பகுதியில் தமிழ் மக்களின் வீடுகள் சிறிலங்கா படையினரால் முற்றாக அழிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வங்காலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சி தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிய மக்கள் அகதிகளாகி முகாம்களில் தங்கியிருந்தனர்.

கடந்த வாரம் முகாம்களை விட்டு வெளியேறிய இப்பகுதி மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பினர்.

இவர்கள் வங்காலைப் பகுதியில் தமது வீடுகளுக்குச் சென்ற போதே அங்கு வீடுகள் இருந்த இடம் தெரியாது முற்றாக அழிக்கப்பட்டிருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல பணிக்கூடு பற்றறிசலும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### கலண்டர் விற்பனைக்கு

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி). மலிவு விலையில் கலண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீகாந்தா புத்தகசாலை. 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3800)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகும். க. பொ. த. (சா/த) கடைசித் தகைமையாகும். நேரில் வந்து கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம். மே/பா: உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (3871)

## கஜமுகன் போர்

(வடமராட்சி)

பொலிகண்டி கிழக்கு சல்லி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் பிள்ளையார் கதையின் இறுதி நாளான இன்று செவ்வாய்க்கிழமை 'இரவு 7 மணிக்கு கஜமுகன் போர்' நடைபெறவுள்ளது. [யோ]


## கடனுதவி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள முகாம்களில் இருக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் 85 பேருக்கு மீளளிப்புக்கடன் வழங்கப்பட்டது.

இடம் பெயர்ந்த கஷ்டப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக கட்டுடை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால்

## 6-ம் ஆண்டு நினைவுநாள்



### லெப். கிறிஸ்ரி

(சீனித்தேவர் பேச்சிமுத்து)

| அடிமை மண்ணில்: | அடிமைத்தளையொடிப்பில்: |
|---|---|
| 5. 5. 1959 | 29. 12. 1986 |

29. 12. 86 இல் கிளிநொச்சி. ஸ்ரீலங்கா இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்துடன் பரந்தனில் நடந்த நேரடிச்சமரில் வீரச்சாவடைந்த எமது வீரவேங்கை லெப் கிறிஸ்ரி அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

20- சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.

சகோதரி, மருமகன், மருமகள், மைத்துனர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(3865)

## 90-ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | வீரச்சாவு: |
|---|---|
| 14 | 30 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1972 | 1992 |



# விநியோகம் முற்றாகத்துண்டிப்பு ஆய்வுகூடக்கல்வி பாதிப்பு

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேர்ந்த கதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் ''சீல்'' வைக்கப்பட்ட கொழும்புக் களஞ்சியத்தில் சுமார் இரண்டு வருடங்களுக்குத் தேவையான ஆய்வுகூட உபகரணங்களும் இரசாயனப் பொருள்களும் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கிறது

இப்பொருள்களை மேற்படி பல்கலைக்கழகத்தின் பாவனைக்காக எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் இக் களஞ்சியம் சீல் வைக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்தின் மேற்படி நடவடிக்கையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூட கற்கை நெறியும், ஆய்வு கூடத்தின் செயற்பாடும் ஸ்தம்பிதமடையும் கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த காலங்களில் இப் பல்கலைக் கழகத்தின் ஆய்வு கூடத்தின் உபயோகத்திற்காக கொழும்பில் மேற்படி பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இப்பொருள்களை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வந்துள்ளது. இதனால் மேற்படி பொருள்கள் கொழும்புக் களஞ்சியத்தில்தேங்கிக்கிடக்கிறது

யாழ். பல்கலைக்கழகத்தின் உபயோகத்திற்கு வேண்டிய ஏனைய பொருள்கள் சிலவற்றை கொள்வனவு செய்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த இப்பல்கலைக் கழகத்தின் உதவி நிதியாளர் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாலும், கொழும்பில் உள்ள மேற்படி களஞ்சியம் சீல் வைக்கப்பட்டிருப்பதாலும் இப் பல்கலைக் கழகத்துக்குத் தேவையான பொருள்களின் விநியோகம் முற்றாகத்துண்டிக்கப்பட்டுள்ளது கைது செய்யப்பட்ட உதவி நிதியாளரை விடுதலை செய்யும் முயற்சியாகவும், கைது செய்யப்பட்டதற்கான காரணங்களை அறிந்து கொள்ளும் முகமாகவும் இப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கொழும்பு சென்றுள்ளார். கொழும்பில் தங்கியிருக்கும் பதிவாளர் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலக அதிகாரிகளுடனும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத்தலைவர் உட்பட ஏனைய அதிகாரிகளுடனும் பேச்சு நடாத்தியதாக கூறப்படுகிறது. எனினும் இப் பேச்சுவார்த்தைகளின் போது மேற்படிவிடயங்கள் குறித்து திருப்திகரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இதேவேளை மேற்படி விடயங்கள் குறித்து நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்பு செல்ல இருக்கிறார். கொழும்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத்தலைவர் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஆகியோர் மட்டத்தில் பேச்சு நடாத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வரலாறு நூல் கருத்தரங்கு

ஆண்டு ஆறு முதல் ஆண்டு ஒன்பது வரையிலான மாணவர்களுக்கு வரலாறு போதிப்பது தொடர்பான வரலாற்று பாடநூல் கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை ஒன்பது மணியளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி வலய, சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கும் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கல்விப்பணிப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

### கந்தர்மடம் ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான

## விநாயக விரத முடிபும் கணபதி ஹோமம்

காலம்:- (30-12 92) புதன்கிழமை காலை 9 மணி

நிகழ்ச்சிகள்:- விநாயக வழிபாடு, ஹோமம், திரவிய அபிஷேகம், தீபாராதனை, பஞ்சமுகார்ச்சனை தொடர்ந்து திருவீதியுலா.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

## இந்து குருமார் ஒன்றியக் கிளைக் கூட்டம்

இந்து மத குருமார் ஒன்றியத்தின் வடமராட்சிக் கிளைக் குழுக் கூட்டம் கடந்த சனியன்று பிற்பகல் ஒருமணியளவில், பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அருகில் இருக்கும் பர்வதபத்தினி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடமராட்சிக் கிளைக்கென ஒரு காரியாலயம் அமைக்கப்பட்டதுடன், குருகுல பாடசாலை நடத்துவது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சகல இந்துமத குருமாரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## விக்னா கல்வி நிறுவனம்

52,ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

| O/L | | |
|---|---|---|
| DAY CLASSES | பிரிவு I | (8.00-2.00) |
| EVENING " | பிரிவு III | 3.15-6.00 |
| SAT,SUN. " | பிரிவு I | (8.00-3.00) |

பிரிவு:- // 6, 7, 8, 9, 10

**ஆரம்பம்:- 05- 01- 1993**

மு கு. 6, 7, 8, 9, 10 க்கான பிரிவு III மட்டுமே ஆரம்பிக்கப்படவுள்ளதால் பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

* ஒவ்வொரு பிரிவுகளுக்கும் குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படும்.
* மாணவர்களுக்கு மாதாந்தம் பரீட்சை நடாத்தப்படும்.
* கணிதம், விஞ்ஞான வகுப்புக்கள் வாரத்தில் நான்கு நாட்கள் நடாத்தப்படும்.

(சி/5667)

## நினைவு கூருகின்றோம்...

**1992-12-29**

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி- இரணைமடுக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய- அன்சார் (கனகரத்தினம் தெய்வேந்திரராசா- 140. தெய்வேந்திரராசா வீதி, வட்டக்கச்சி- கிளி

விரகத்தி விநாயகர் ஆலயத் தில் நடைபெற்றுவரும் பிள் ளையார் கதையின் இறுதி நாளான இன்று செவ்வாய்க் கிழமை 'இரவு 7 மணிக்கு கஜ முகன் போர்' நடைபெறவுள் ளது. [யோ]

## கடனுதவி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அர சாங்க அதிபர் பிரிவில் உள்ள முகாம்களில் இருக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் 85 பேருக்கு மீளவிப் புக்கடன் வழங்கப்பட்டது.

இடம் பெயர்ந்த கஷ்டப் பட்ட மக்களின் நல்வாழ்வுக் காக கட்டுடை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் மீளவிப்புக்கடனாக வழங்கப் பட்ட ஒரு லட்சத்து எழுப தாயிரம் ரூபாவும் சுழற்சி முறையில் தொடர்ந்து !ஏனை யவர்களுக்கும் வழங்கப்பட வுள்ளது. [42]

## நத்தார் உலா


[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை வளன் புரம் இளைஞர் நட்சத்திர ஒழுங்கினரால் மூன்று நாட் கள நத்தார் சுற்றுலா] கிறிஸ் மஸ் கரோல்] நிகழ்ச்சி சிறப் புற நடத்தப்பட்டுள்ளது.

20- சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. மைத்துனர், உற்றார், உறவினர், நண்பர்கள். (3865)

# 90-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 02 — 1972



வீரச்சாவு: 30 — 09 — 1992

## லெப். அரவிந்தன்
[தங்கவேல் ரவி]

தமிழன்னை, தமிழீழம், தமிழர்தம் தன்மானம்
இவையன்றி காப்பதற்கு வேறொன்றில்லை,
என்றுமே குரலெழுத்தப் பதவியா கோங்வெவவில்
இன்னுயிரை யர்ப்பணித்துப் படையினை வென்றவனே!
மண்ணினைக் காத்த மாவீரனே அரவிந்தா!
கண்மணியே! உந்தனுக்கு வீரவணக்கம் பல!

ஜெயந்திநகர், கிளிநொச்சி. (3808)
பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன்

அமரர் வைத்திய கலாநிதி JPC. பிலிப்ஸ்

## ஞாபகார்த்த சபை நடாத்தும்
## கிறிஸ்மஸ் உதைபந்தாட்ட விழா

இடம்: புனித பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானம்
காலம்: 30-12-1992 புதன்கிழமை பி.ப. 3.00 மணி

1. பாடும்மீன் வி.க (குருநகர்) எதிர் சென். நீக்கிலஸ் வி.க(நாவாந்துறை)
2. சென். அன்ரனிஸ் வி.க. (பாஷையூர்) எதிர் சென். மேரிஸ் வி.க. (நாவாந்துறை)

## உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

## பிரவேசம் ரூபா 5/-

விளம்பர உபயம்!

X.B. மொறாயஸ்
(கண்ணாடி விநியோகத்தர்)
50. மணிக்கோபுர வீதி.
வெலிங்டன் சந்தி. யாழ்ப்பாணம். (சி/5663)

ஆசிரியர்களுக்கும் கல்விப்பணி பாளர் அழைப்பு விடுத்துள் ளார். பேச்சுவார்த்தைகளின் போது மேற்படிவிடயங்கள் குறித்து திருப்திகரமான சூழ்நிலை

கந்தர்மடம் ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான

## விநாயக விரத முடிபும் கணபதி ஹோமம்

காலம்:- (30-12 92) புதன்கிழமை காலை 9 மணி

நிகழ்ச்சிகள்:- விநாயக வழிபாடு, ஹோமம், திரவிய அபிஷேகம், தீபாராதனை, பஞ்சமுகார்ச் சனை தொடர்ந்து திருவீதியுலா.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ வை. கருணாகரேஸ்வரக்குருக்கள்
(பிரதமகுரு)
(3872)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 18 — 11 — 1936



இறைவனின் அடியில்: 29 — 11 — 1992

## கந்தையா சிவலிங்கமூர்த்தி
(முன்னாள் படவரைஞர் நில அளவை திணைக்களம)

அகிலமெல்லாம் வாயாக்கி அழுது புரண்டாலும்
எங்கள் கவலை தீராது ஐயா!
மங்கலாய் நாம் கண்கலங்க
திங்களாய் எமக்கு ஒளி தந்த அன்புத் தெய்வமே!
எங்கு சென்றாய் இனி எப்போ காண்போம் ஐயா!

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளிலும் எமது துன்பத்திலும் பங்கு கொண்டதோடு பற்பல வழியிலும் உதவிகளையும் ஆறுதல் வார்த்தைகளையும் தந்தவர்களுக்கும் ஆட்டோ உரிமையாளர்கள், சாரதி களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும், தக்க சமயத்தில் கருத்த ஒத்தாசைகள் புரிந்த திரு. மு. சிவசுப்பிரமணி யம் சி. நகுலேஸ்வரி தம்பதிகளுக்கும் எமது நன்றிகள்.

231, சட்டநாதர் வீதி, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம். (3867)
உங்கள் பிரிவால் துயருறும் தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள்.

★ மாணவர்களுக்கு மாதாந்தம் பரீட்சை நடாத் தப்படும்.

★ கணிதம், விஞ்ஞான வகுப்புக்கள் வாரத்தில் நான்கு நாட்கள் நடாத்தப்படும்.

(சி/5667)

# நினைவு கூருகின்றோம்...

## 1992-12-29

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி-இரணைமடுக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-
அன்சார் (கனகரத்தினம் தெய்வேந்திரராசா- 140. தெய்வேந்திரராசா வீதி, வட்டக்கச்சி- கிளிநொச்சி)

திருக்கோணமலை - கோபாலபுரம் பகுதியில் சிறி லங்காப்படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 3- குழந்தைகள், 3- பெண்கள், மற்றும் கர்ப்பிணிப்பெண்.

1986ஆம் ஆண்டு பரந்தன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
லெப். கிறிஸ்ரி (சீனித்தேவர் பேச்சிமுத்து- 20, சிவப் பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை- யாழ்.)
ஜக்சன் (சிவபுண்ணியம் ஜெயச்சந்திரன்- வதிரி, கர வெட்டி வடக்கு- யாழ்.)

1988-ம் ஆண்டு மட்டு- சேனையூர்ப்பகுதியில் இந்தி யப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-
கப்டன் ரவி (வடிவேல் நாகேஸ்வரன்- 6-ம் வட்டா ரம், சேனையூர்- மட்டு.)

யாழ். கன்னாகத்தில் இந்தியப்படையினரால் சுட் டுக் கொல்லப்பட்ட தமிழ் மூதாட்டி.

1991-ம் ஆண்டு திருக்கோணமலை- சல்லிமுற்றன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
அருணன்/ஷெல்டன் (கணபதிப்பிள்ளை பாலராஜ்- திருக்கோணமலை)
புகழேந்தி / கலீல் [ஜோஜ் நிக்சன் - சீனக்குடா- திருக்கோணமலை]
சிவமணி / தியாகு [வேலாயுதம் ரவிச்சந்திரன் - மூதூர் - திருக்கோணமலை]
அறிவழகன் / தீசன் [இராசரட்ணம் சத்திய மோகன் -புல்மோட்டை - திருக்கோணமலை]

1991 ஆம் ஆண்டு மட்டு - கொக்குவில் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற் கொண்ட தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
கௌரி [மாமாங்கம் - மட்டக்களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-5664)

சிந்தனைக்கு

கட்டாயத்தின் பேரில் செயல்படுத்த வேண்டிய சட்டம் எதுவும், பொதுமக்கள் உணர்வை விடப் பலமாக இருக்க முடியாது.
— ஆபிரஹாம் லிங்கன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 29- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

# முரண்பாடுகளினால் திருப்திப்பட ஏதுமில்லை

சிறிலங்கா இராணுவத்திற்குள் தீவிர முரண்பாடு நிலவுவதைக் கொழும்பிலிருந்து வரும் பல தகவல்கள் தெரிவிக்கின்றன. இம்முரண்பாடு இராணுவத் தளபதிகள், பாதுகாப்புத்துறைச் செயலாளர்கள் உட்பட பல மட்டங்களிலும் காணப்படுவதாகவும் இத் தகவல்கள் உணர்த்துகின்றன. இதன் காரணமாக ஒருவருக்கெதிராக ஒருவர் செயற்படுவதாகவும் அறிய முடிகின்றது.

இந்த வரிசையில் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிற்கும், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவிற்கும் இடையில் உள்ள முரண்பாடும், இராணுவத் தளபதிக்கும், பாதுகாப்புத்துறைச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிற்கும், விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனாவிற்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் வால்டர் பெர்னாண்டோவிற்கும் இடையில் உள்ள முரண்பாடுகளும், மோதல்களும் பிரபல்யமானவை.

இம்முரண்பாடுகள் காரணமாக ஆயுதக் கொள்வனவில் இருந்து போர் முறை யுக்திகள் வரை இவர்கள் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களை மறைமுகமாகவும், நேரடியாகவும் அள்ளி வீசுவதுண்டு. ஒரு பகுதியினர் கொள்வனவு செய்யும் ஆயுதத்தை மறுபகுதியினர் குறை கூறுவதும், போர்முனைக்கு உதவாது எனக் குற்றம் சாட்டுவதும், ஒரு பகுதியினர் நிராகரித்த ஆயுத தளபாடத்தை மறு பகுதியினர் கொள்வனவு செய்யமுற்படுவதும் அவதானிக்கக்கூடியதொன்றாகவுள்ளது.

இதனை வலியுறுத்துமாப்போல் அண்மையில் நடந்த விமானக் கொள்வனவு இருந்தது. ஒரு பகுதியினர் பாவனைக்குஉதவாததுஎனக்கூறிய 'புக்காரா' விமானத்தை மறு பகுதியினர் கொள்வனவு செய்துள்ளனர். இதே போன்றே இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா போன்றோர் இராணுவத்தின் தளபாட வசதிகளையும்,

# காங்கிரஸ் - அ. இ. அ. தி.மு. க. தேனிலவு முடிவை நோக்கிச் செல்கிறது

கடந்தமுறை நடைபெற்ற சட்டசபைத் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் அ. இ அ. தி. மு. கவும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்தமையால் பெரும் வெற்றியைத் தட்டிக்கொண்டது தெரிந்ததே ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள நிலையானது இக் கூட்டணி தொடர்ந்து நீடிக்கும் என்று கருதக்கூடிய எல்லா சாத்தியப்பாட்டையும் நிராகரிப்பதாக உள்ளது.

அ. இ. அ. தி. மு. க.விற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு என்பது பெரும்பாலும் ஜெயலலிதாவிற்கும் வாழப்பாடி இராமமூர்த்திக்கும் இடையிலான நல்புணர்விலேயே அத்திவாரமிட்டிருந்தது என்றால் மிகையானதல்ல. எனினும், அ. இ. அ. தி. மு. கவின் பொதுச்சபைக்கூட்டத்தில் காங்கிரஸ்கட்சியின் மீதும், அதன் தலைமைமீதும் பொழியப்பட்ட வசைமாரிகளுக்குப் பின்பும் வாழப்பாடி இராமமூர்த்தி தொடர்ந்தும் அ. இ. அ. தி. மு.க வுடன் நட்புறவு பாராட்டுவது சிரமமானதாகத்தான் இருக்கும். இதனால் தான் அ. இ. அ. தி. மு. க. தன்னிச்சையாக செயற்பட முடிவு செய்தால் காங்கிரஸ்கட்சி அதுபற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காது என்று அவர் அறிக்கை வெளியிட நேர்ந்துள்ளது.

அ. இ. அ. தி. மு. க வின் பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அக்கட்சியின் அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுவதாகக் கூறும் அளவிற்கு அவர் வெறுப்பேற்றப்பட்டிருக்கின்றார்.

இதில் குறிப்பிடக் கூடிய தென்னவெனில், இவ்விரு தோழமைக் கட்சிகளும் தமக்கிடையிலான கூட்டணி உறவு நீடிக்கும் என்றே எப்போதும் கூறி வந்தன என்பதேயாகும். இந்த வகையில்தான் அ. இ. அ. தி. மு. க. வின் தலைமைக்கு ஏற்பட்ட தப்பபிப்பியராங்களைப் போக்கும் முயற்சியில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற வகையில் பிரதமர் நரசிம்மராவ் தானே நேரடியாகத் தலையிட்டு சில விளக்கங்களை அளித்திருந்தார். ஆனால் இது நடந்து சில தினங்களுக்குள்ளேயே இந்த நிலைமை உருவாகியிருக்கிறது.

சுமார் பத்து நாட்களுக்கு முன்புதான் தமிழ் நாட்டில் இராணுவம் குவிக்கப்பட்டிருப்பது பற்றிய தமிழக அரசின் கவலை பிரதமர் நரசிம்மராவிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. சுமார் பத்து பக்கங்களுக்கும் மேல் நீளமான கடிதம் ஒன்றை பிரதமருக்கு எழுதிய ஜெயலலிதா தமிழகத்தில் இராணுவம் குவிக்கப்படுவது தமது அரசு கலைக்கப்படும் என்ற ஊகங்களுக்குக் காரணமாக அமைவதாகச் சுட்டிக் காட்டினார்.

ஜெயலலிதாவின் கடிதத்துடன் புதுடில்லிக்கு விரைந்த மாநில அமைச்சர்களான அரங்கநாயகம், மற்றும் கண்ணப்பன் ஆகியோரைச் சந்திப்பதற்கு பிரதமர் தமது நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கியிருந்தார் இச் சந்திப்பின்போது கேரளா மாநிலத்தின் திருவனந்தபுரம் செல்லும் வழியிலேயே தமிழகத்தில் இராணுவம் தங்கியிருப்பதாகத் தெளிவு படுத்தியிருந்தார் இதன் பின்னர் அ இ அ.தி.மு.க தலைமை பெரும்பாலும்திருப்தியடைந்த நிலைமையிலேயே இருந்ததாகக் கூறப்பட்டது. இது இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி உறவில் எந்த விரிசலும் இல்லை என்று அரங்கநாயகம் விடுத்த அறிக்கையின் மூலம் மேலும் தெளிவு படுத்தப்பட்டது.

> காங்கிரஸ் அ. இ. அ. தி.மு.க கூட்டணி பற்றி இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகையின், டி. கே. ராஜகோபாலன் எழுதி அகில இந்திய வானொலியில் நேற்று ஒலிபரப்பப்பட்ட செய்தி விமர்சனக் குறிப்பின் மொழியாக்கம் இது.

ஆனால்இப்போதைய நிலைமையைப் பார்க்கும் போது மத்திய அரசின் அணுகுமுறை எதுவும் தமிழக அரசையோ அ.இ.அ.தி மு.க தலைமையையோ திருப்திப்படுத்தியதாகத் தெரியவில்லை இது மத்திய அரசின் பலதரப்பட்ட கொள்கைகளை பலமாகக் கண்டித்து அ.இ.அ.தி.மு.க பொதுக்குழு நிறைவேற்றியிருக்கும் தீர்மானங்கள் மூலம் மேலும் தெளிவாகின்றது.

அ.இ.அ.தி மு.க. அரசு உணரும் பாதுகாப்பற்ற நிலைமையைப் போக்க காங்கிரஸ் கட்சி தவறிவிட்டதாகவே இப்போதைய நிலையில் தோன்றுகிறது. பிரதமர் தானே நேரில் அளித்த உறுதிமொழிகளையும் வாக்குறுதிகளையும் கூட நம்புவதற்கு ஜெயலலிதா தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

அ. இ. அ. தி. மு. க. வின் போக்கு குறித்து எதிர்விளைவுகளை காங்கிரஸ் கட்சியின் வாழப்பாடி இராமமூர்த்தியும் இப்போதுதெளிவாககாட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சிக்குள் நிலவும் கோஷ்டிப் பூசல்களால், மூப்பனார் குழுவிடமிருந்து வெளிவரக்கூடிய பதில்களிலும் பார்க்க வாழப்பாடி இராமமூர்த்தியின் இத்தகைய எதிரொலிப்பு பலமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பொதுவாகத்தெரிந்ததே.

எனவேதான் மீண்டும் காங்கிரஸ் - அ.இ.அ.தி.மு.க. கூட்டணி ஏற்படுவதற்கு தேவையான உகந்த சூழலை உருவாக்கக்கூடிய எவரும் இப்போது இருதரப்பிலும் இல்லைஎன்றே கருதத்தோன்றுகிறது அதுவும் பழனிநாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் நல்லுறவையும்,நட்புணர்வையும் வளர்க்கக்கூடிய எவரையும் இருதரப்பிலும் காண முடியாமலிருப்பது எதிர்கால நிகழ்ச்சிகளுக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது எனலாம்.

# வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனியரை இஸ்ரேல் திரும்ப ஏற்காது

## ஐ.நா. விசேட தூதுவரிடம் தெரிவிப்பு

[டெல்அவிவ்]

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவராக ஜெருசலேம் சென்றுள்ள ஜேம்ஸ் ஜோலரிடம் வெளியேற்றப்பட்ட நானூற்றுப்பதினைந்து பாலஸ்தீனியரையும் திரும்ப அழைத்துக் கொள்ளப் போவதில்லை என்று இஸ்ரேல் தெளிவுபடக் கூறியுள்ளது. ஐ நா. விசேட தூதுவர் இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபின், வெளியுறவு அமைச்சர் சிமொன் பெரஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஐ. நா. சபை இப்பிரச்சினை தொடர்பாக நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒரு தரப்பானது என்று குற்றஞ்சாட்டியுள்ள சிமொன்பெரஸ் மேலும் கூறுகையில்; இஸ்ரேல் தனது முடிவிலிருந்து பின் வாங்காது எனவும் குறிப்பிட்டார்.

# ஈராக்கிய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

(பக்தாத்)

தெற்கு ஈராக்கில்விமானம் பறப்பதற்கு ஐ. நா. தடைவிதித்துள்ள பகுதியில் பறந்த ஈராக் விமானமொன்றை அமெரிக்காவின் ஜெட் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தியுள்ளது. இது பற்றி அமெரிக்க இராணுவ தரப்பு வெளியிட்டுள்ள தகவலில் தடைவிதிக்கப்பட்ட பகுதியில் ஈராக்கிய விமானங்கள் இரண்டு பறப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து அவ்விமானங்கள் விலகிச் செல்ல வேண்டும் என்று விடப்பட்ட வேண்டுகோளை ஏற்று ஒரு விமானம் விலகிப் பறந்து சென்றதாகவும், மற்ற விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயம்

# பாலராமரைத் தரிசிக்க பொதுமக்களுக்கு அனுமதி

[டில்லி]

அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்டபகுதியில்கட்டப்பட்டராம்லிலாஎன்றுஅழைக்கப்படும் பாலராமரை தரிசிப்பதற்கு பொதுமக்களை அனுமதிப்பது என்று பைசாபாத் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அந்த இடத்திற்கு பக்தர்களை ஒழுங்காக அனுப்பி வைக்கவும், இது தொடர்பான பாதுகாப்பு விடயங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அரசு வட்டாரங்கள் கூறியுள்ளன. இன்னும் சில தினங்களில் இந்த ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகும் எனவும், அதன் பின்னர் பொது மக்கள் தரிசனத்திற்கு அந்த இடம்திறந்து விடப்படுமெனவும் கூறப்படுகிறது.

# மத்திய அரசின் உறுதிமொழியை மீறும் செயலாகும்

## - செய்யது சகாபுதீன் கண்டனம்

[டில்லி]

அயோத்தியில் வழிபாடு நடத்த பைசாபாத் நகர நிர்வாகம் அனுமதி அளித்திருப்பதை உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் வர

பாபர்மசூதிசெயற்குமிட்டியின் தலைவர் செய்யது சகாபுதீன் இதற்கு வன்மையான கண்டனம் தெரிவித்திருப்பதுடன் பாபர் மசூதி மீண்டும் கட்டப்படும் என்ற மத்திய அரசின்

உள்ள முரண்பாடுகளும், மோதல்களும் பிரபல்யமானவை.

இம்முரண்பாடுகள் காரணமாக ஆயுதக் கொள்வனவில் இருந்து போர் முறை யுக்திகள் வரை இவர்கள் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களை மறைமுகமாகவும், நேரடியாகவும் அள்ளி வீசுவதுண்டு. ஒரு பகுதியினர் கொள்வனவு செய்யும் ஆயுதத்தை மறுபகுதியினர் குறை கூறுவதும், போர்முனைக்கு உதவாது எனக் குற்றம் சாட்டுவதும், ஒரு பகுதியினர் நிராகரித்த ஆயுத தளபாடத்தை மறு பகுதியினர் கொள்வனவு செய்யமுற்படுவதும் அவதானிக்கக்கூடியதொன்றாகவுள்ளது.

இதனை வலியுறுத்துமாப்போல் அண்மையில் நடந்த விமானக் கொள்வனவு இருந்தது. ஒரு பகுதியினர் பாவனைக்குஉதவாததுஎனக்கூறிய'புக்காரா' விமானத்தை மறு பகுதியினர் கொள்வனவு செய்துள்ளனர். இதே போன்றே இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா போன்றோர் இராணுவத்தின் தளபாட வசதிகளையும், ஆளணிகளையும் பெருக்க வேண்டும் எனக் கோரும்போது ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவோ உள்ளது போதும் இதைக் கொண்டே புலிகளைச் சமாளித்து விடலாம் என வற்புறுத்துவதாகத் தெரிகின்றது.

தளபதிகளுக்கிடையிலான முரண்பாட்டால், உலகில் யுத்தம் நடக்கும் நாடுகளில் பொதுவாக இடம்பெறாத, வழமைக்கு மாறான நடவடிக்கைகளைக் கூட இவர்கள் மேற்கொள்வதாகத் தெரியவருகின்றது. அண்மையில் சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடத்தின் கீழ் உள்ள ஆயுதக் களஞ்சியங்களில் உள்ள ஆயுதங்கள், வெடிப் பொருள்கள் என்பனவற்றைக் கணக்கிடவென கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் குழுவொன்றை நியமித்தமை இதற்கு சிறந்த உதாரணமாகும்

அத்தோடு, அமைச்சு செயலாளர்கள் மட்டத்திலுள்ள முரண்பாடுகளும் இத் தளபதிகளின் பதவி நிலை, அதிகார நிலை மாற்றத்திற்கும் காரணமாகவும் அமைந்திருந்தன. இவ் வருடத்தில் நடந்த அதிகார நிலை மாற்றங்களின் பின்னணியில் இவர்கள் முக்கிய பங்காற்றியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு, அமைச்சர்கள், தளபதிகள் மட்டத்தில் உள்ள உறவுகளும், முரண்பாடுகளும், அவற்றால் ஏற்படும் விளைவுகளும் இராணுவத்தில் முரண்பாடுகள் பெரிதாகி விரிவடைவதற்கு ஏதுவாக இருந்தன.

இவ்வாறாக இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள் மட்டத்தில் எந்தவகை முரண்பாடு நிலவிவரினும், அவர்கள் ஒரே ஒரு விடயத்தில் மட்டும் ஒரே கருத்தையே கொண்டுள்ளனர். அது தமிழரின் தேசிய இனப்போராட்டத்தை இராணுவபலம் கொண்டு நசுக்குவதாகும்.

அதாவது, இராணுவத் தளபதிகள் அமைச்சு அதிகாரிகள் மட்டத்தில் நிலவும் எந்தவிதமான முரண்பாடும், இராணுவத்தீர்விற்கு எதிரானவையல்ல. அவை தமிழரை எவ்வளவு விரைவாக நசுக்கலாம் என்ற தீவிரநோக்கம் கொண்டவையே ஆகும். இந்நிலையில், இராணுவத்தினர் மத்தியில் உள்ள முரண்பாடு சிங்கள இராணுவத்தினதோ, அன்றி அரசாங்கத்தினதோ இராணுவத்தீர்வு என்ற நிலை எதையும் மாற்றிவிடப்போவதில்லை. மாறாக இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலம் தம் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள முற்படுவதாகவே இருக்கும். இதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

---

## ஐ. நா. விசேட தூதுவரிடம் தெரிவிப்பு

[டெல்அவிவ்]

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவராக ஜெருசலேம் சென்றுள்ள ஜேம்ஸ் ஜோலரிடம் வெளியேற்றப்பட்ட நாநூற்றுப்பதினைந்து பாலஸ்தீனியரையும் திரும்ப அழைத்துக் கொள்ளப் போவதில்லை என்று இஸ்ரேல் தெளிவுபடக் கூறியுள்ளது. ஐ நா. விசேட தூதுவர் இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபின், வெளியுறவு அமைச்சர் சிமொன் பெரஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஐ. நா. சபை இப்பிரச்சினை தொடர்பாக நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒருதரப்பானது என்று குற்றஞ்சாட்டியுள்ள சிமொன்பெரஸ் மேலும் கூறுகையில்; இஸ்ரேல் தனது முடிவிலிருந்து பின் வாங்காது எனவும் குறிப்பிட்டார்.

## ஈராக்கிய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

(பக்தாத்)

தெற்கு ஈராக்கில்விமானம் பறப்பதற்கு ஐ. நா. தடைவிதித்துள்ள பகுதியில் பறந்த ஈராக் விமானமொன்றை அமெரிக்காவின் ஜெட் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தியுள்ளது. இது பற்றி அமெரிக்க இராணுவ தரப்பு வெளியிட்டுள்ள தகவலில் தடைவிதிக்கப்பட்ட பகுதியில் ஈராக்கிய விமானங்கள் இரண்டு பறப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து அவ்விமானங்கள் விலகிச் செல்ல வேண்டும் என்று விடப்பட்ட வேண்டுகோளை ஏற்று ஒரு விமானம் விலகிப் பறந்து சென்றதாகவும், மற்ற விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விமானம் சுடப்பட்டமை பாரதூரமான ஆக்கிரமிப்பு

**- ஈராக் கண்டனம்**

(பக்தாத்)

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை ஒரு பாரதூரமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்றும் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்றும் ஈராக் எச்சரிக்கை செய்துள்ளது.

தெற்கு ஈராக்கில் விமானங்கள் பறப்பதற்கு அமெரிக்கா கனடா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் இணைந்து கடந்த ஆகஸ்ட் முதல் தடைவிதித்திருப்பது தெரிந்ததே இபபகுதியில் வாழும் உள்ளூர் மக்கள் மீது பக்தாத் விமானக் குண்டுவீச்சு நடத்துவதை கட்டுப்படுத்தும் முகமாகவே ஈராக்கிய விமானங்கள் பறப்பதற்கு இப் பிரதேசம் தடைசெய்யப்பட்டதாக பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

எனினும் இப்பகுதிக்குள் இருபது மைல் தூரத்திற்கு ஈராக் விமானங்கள் ஊடுருவல் நடத்தியதாகவும் ஒரே நாளில் இரண்டாவது முறையாகவும் ஊடுருவல் நடத்தப்பட்டதையடுத்தே விமானம் சுடப்பட்டதாகவும் அமெரிக்க இராணுவத்தலைமையகமான பென்டகன் கூறியுள்ளது.

## சோவியத் யூனியன்கலைப்பு அவசியமற்ற ஒரு செயல்

**-கொர்பசேவ் கருத்து**

கடந்த ஆண்டின் இறுதியில் சோவியத் யூனியன் என்ற அமைப்பைக் கலைத்தமை ஒரு அவசியமற்ற செயல் என்றே கருதுவதாக முன்னாள் சோவியத் அதிபர் மிக்கெயில் கொர்பசேவ் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், அமைப்பைப் பிளவுபடுத்தியதில் ஒரு தவறு நேர்ந்துவிட்டது எனவும், சோவியத் யூனியன் என்ற அமைப்பு பிளவுபட்டதால் அதில் அங்கம் வகித்த பல்வேறு குடியரசுகளும் பலத்த பாதகமான விளைவை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய அரசிற்கு ஈராக் பாராட்டு

(பக்தாத்)

அயோத்தியாவில் பள்ளி வாசல் தகர்க்கப்பட்டது தொடர்பாக இந்திய அரசும், அரசியற் கட்சிகளும் கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து ஈராக் பாராட்டு தெரிவித்துள்ளது.

ஈராக்கின் மதவிவகார அமைச்சர் ஜனாப் அப்துல் லாஹ் பாதில் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேலும் பள்ளிவாசலை கட்டும் அரசின் தீர்மானத்தை வரவேற்றிருப்பதுடன், குழப்பத்தை உண்டு பண்ணும் நாசகார சக்திகளை தண்டிக்கும்அரசின்போக்கிற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

## விமானம் மூலம் ஊடுருவி மனைவி, பிள்ளைகள் மீட்பு

**- கியூபாவில் சம்பவம்**

(மியாமி)

கியூபாவிலிருந்து கள்ளத்தனமாக வெளியேறிய கியூபாவாசி ஒருவர், அந்நாட்டிற்குள் விமான மூலம் கடந்த சனியன்று பிரவேசித்து தனது மனைவியையும், பிள்ளைகளையும் மீட்டுக்கொண்டு பாதுகாப்பாகதிரும்பியுள்ளார்.

அமெரிக்க நகரமான மியாமிக்கு வந்து சேர்ந்ததும் கியூபாவின் அதிபரான பிடெல் கஸ்ரோவின் இராணுவ பாதுகாப்பு குறித்து மிக ஏளனமாகப் பேசினார்.

இவரது விமானம் கியூபாவிற்கு மேலாக பறந்து சென்று கொண்டிருந்தபோது அங்கு படைகளின் இராணுவ ஒத்திகை நடந்து கொண்டிருந்ததாக அங்கிருந்த மற்றொருவர் சுட்டிக்காட்டினார்.

## விஜயம் ஒத்திவைப்பு

இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் சிமொன் பெரஸ் இந்தியாவிற்கு மேற்கொள்ள உத்தேசித்திருந்த உத்தியோகபூர்வ விஜயத்தை தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளார். இந்தவிஜயம்ஒத்திவைக்கப்பட்டமைக்கு இந்தியாவில் நிலவும் உள்நாட்டுச் சூழலே காரணம் என்று இந்திய மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

---

அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்டபகுதியில்கட்டப்பட்டராம்லிலாஎன்றுஅழைக்கப்படும் பாலராமரை தரிசிப்பதற்கு பொதுமக்களை அனுமதிப்பது என்று பைசாபாத் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அந்த இடத்திற்கு பக்தர்களை ஒழுங்காக அனுப்பி வைக்கவும், இது தொடர்பிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அரசு வட்டாரங்கள் கூறியுள்ளன. இன்னும் சில தினங்களில் இந்த ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகும் எனவும், அதன் பின்னர் பொது மக்கள் தரிசனத்திற்கு அந்த இடம்திறந்து விடப்படுமெனவும் கூறப்படுகிறது.

## மத்திய அரசின் உறுதிமொழியை மீறும் செயலாகும்

**- செய்யது சகாபுதீன் கண்டனம்**

[டில்லி]

அயோத்தியில் வழிபாடு நடத்த பைசாபாத் நகர நிர்வாகம் அனுமதி அளித்திருப்பதை உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் வரவேற்றுள்ளார்.

எனினும் அகில இந்திய பாபர்மசூதிசெயற்கமிட்டியின் தலைவர் செய்யது சகாபுதீன் இதற்கு வன்மையான கண்டனம் தெரிவித்திருப்பதுடன் பாபர் மசூதி மீண்டும் கட்டப்படும் என்ற மத்திய அரசின் உறுதிமொழியை மீறுவதாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

## கம்யூனிஸ்ட் கட்சிகள் பலத்த கண்டனம்

(டில்லி)

அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் ராம்லிலா கோவிலில் வழிபாடுகள் நடத்துவதற்கு பைசாபாத் நிர்வாகம் அனுமதித்திருப்பதை மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு கண்டனம் செய்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்; சர்ச்சைக்குட்பட்ட பகுதி தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்வரையில் இத்தகைய அனுமதி வழங்கப்படுவது முறையல்ல என்றே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கருதுவதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சத்தனருந்தி மிஸ்ரா கூறுகையில் பைசாபாத் நிர்வாகத்தின் இந்த முடிவு துக்ககரமானது, துரதிஷ்ட வசமானது என்றும் வர்ணித்தார்

அத்துடன் அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்ட பகுதி முழுவதையும் மத்திய அரசின் வசப்படுத்தும் முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ள ஜனதாதளம், இவ் விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அயோத்தியாவின்

## சர்ச்சைக்குட்பட்ட பகுதி மத்திய அரசின் வசமாகும்

(டில்லி)

அயோத்தியாவில் இருக்கும் சர்ச்சைக்குட்பட்ட பகுதிகள் அனைத்தையும் மத்திய அரசு தன்னுடைய பொறுப்பில் கையகப்படுத்திக் கொள்வதென மத்திய அரசு தீர்மானித்துள்ளது. டில்லியின் அமைச்சரவை கூடி இந்த முடிவை எடுத்ததுடன் பாபர்மசூதியையும், ராமர் ஆலயத்தையும் மீளக்கட்டுவதற்கு இரண்டு வெவ்வேறு நிதியத்தை அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குட்பட்ட பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டு கையகப்படுத்துவது எனவும், சர்ச்சைக்குட்பட்ட பகுதியில் ஒரு இந்து ஆலயம் இருந்தமைக்கான சான்றுகள் இருக்கின்றனவா என்பதை கண்டறியுமாறு கோரி உச்சநீதிமன்றத்தை குடியரசுத்தலைவர் மூலம் அணுக வேண்டும் என்றும் மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அத்துடன் சர்ச்சைக்குட்பட்ட பகுதி கொள்வனவின் மூலம் கையகப்படுத்தப்பட்டாலும்கூட, அவசர கால சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு முன்பிருந்தநிலை தொடர்ந்து பராமரிக்கப்படும் எனவும், இவ் விடயத்தில் உச்சநீதிமன்றம் தனது கருத்தை வெளியிடும்வரை இந்நிலை தொடர்ந்து பேணப்படுமெனவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஈழநாதம்

தலைவர்களை விடுவிக்குமாறு

# ஆர்ப்பாட்டம் நடத்திய 400 பா.ஜ. தொண்டர் கைது

(டில்லி)

கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள தலைவர்களை விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் நடாத்திய நானூறு பாரதீய ஜனதாக் கட்சி தொண்டர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

அயோத்தி பாபர் மசூதி அண்மையில் இடிக்கப்பட்டது தொடர்பாக அத்வானி மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் உயர் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியே நேற்று ஆயிரக் கணக்கான பாரதீய ஜனதாக் கட்சியின் தொண்டர்கள் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபடத் தொடங்கியதை அடுத்து இதனைக் கலைக்கும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதுடன் நானூறுக்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களையும் கைது செய்தனர்.

## பத்தாயிரம் கிலோமீற்றர் மனிதசங்கிலி அமைக்கப்படும்

இனங்களுக்கிடையில் நல்லுறவை உருவாக்கும் ஒரு முயற்சியாக பத்தாயிரம் கிலோமீற்றர் நீளமுடைய மனிதச் சங்கிலி ஒன்றை உருவாக்கப் போவதாகவும், சுமார் இரண்டு கோடி மக்கள் கலந்து கொள்ளும் இம் மனிதச் சங்கிலி ஜனவரி 26 ஆம் திகதியன்று நடத்தப்படுமெனவும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் கல்கத்தாவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வகுப்புவாதம் மற்றும் இந்து அடிப்படைவாதத்திற்கு எதிராக மாநிலமெங்கும் சுமார் ஒரு மாத காலத்திற்கு தொடர்ச்சியாக இயக்கம் நடத்தப்படுமெனவும், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், வீடுவீடான பிரசாரம் என்பனவும் இதில் அடங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## 2-ம் லெப். கதிரின் புகழுடல் இன்று மக்கள் அஞ்சலிக்கு

நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் கதிர் (ஞானகுருபரன் சுதர்சன், வட்டுக்கோட்டை. தற்போதைய முகவரி ஐயனார் வீதி, சண்டிலிப்பாய்) எனும் போராளியின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று பிற்பகல் 2-30 மணி தொடக்கம் 3-30 மணிவரை மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டத்தைதொடர்ந்து இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

## காங்கிரஸ் அ.தி.மு.க உறவு பலமாகவே உள்ளதாம்

- நரசிம்மராவ் தெரிவிப்பு

இந்திரா காங்கிரஸ் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகங்களுக்கு இடையிலான உறவு மிகவும் வலுவாக உள்ளதாக பிரதம மந்திரி திரு நரசிம்ம ராவ் கூறியுள்ளார்.

நேற்று கன்னியா குமரியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு திரும்புகையில் விமான நிலையத்தில் வைத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அ இ அ. தி. மு. க உணர்வுகளுக்கு இந்திரா காங்கிரஸ் அனுசரிக்கவில்லை என அ. தி. மு. க. குற்றம்சாட்டியிருப்பது குறித்து செய்தியாளர்கள் நரசிம்மராவிடம் கருத்து கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கும் அங்குமாக உறுப்பினர்கள் ஏதாவது கூறிவருகின்ற போதிலும் கூட்டணி வலுவாகவே உள்ளதென்று அவர் மேலும் கூறினார்.

## வெற்றிலைகேணியில் எறிகணை வீச்சு

கட்டைக்காடு, ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் பகுதியிலிருந்து நேற்றிரவு வெற்றிலைக்கேணியை அண்டிய பகுதியை நோக்கி பலத்த எறிகணை தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

நேற்று இரவு 8-00 மணி முதல் தொடர்ச்சியாக 50ற்கு மேற்பட்ட எறிகணைகள் இப்பகுதியை நோக்கி ஏவப்பட்டதாகவும் இதே வேளை இப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டு சத்தங்களும் தொடர்ச்சியாக கேட்ட வண்ணம் இருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வகுப்புகள் ஆரம்பம்

க. பொ. த. (சா/த) பரீட்சைக்காக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ். கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய கல்வி வளர்ச்சிக் கழக வகுப்புக்கள் [ஆண்டு - 5 தொடக்கம் ஆண்டு-11 வரை] 30.12 92 புதன்கிழமையில் இருந்து நடைபெறும் என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ். கல்விக்கோட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

## அதிபர்களுக்கான கூட்டம்

வடமராட்சிக் கல்விக் கோட்ட கொத்தணி, பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை மு.ப. 9-30 மணிக்கு யா/ வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் பாடசாலை மாணவர் சீருடை, இலவசப்புத்தகம் விநியோகிப்பது பற்றித் தெரிவிக்கவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது சமுகம் தரும்வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## கலை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் யாழ். மாவட்டப் பிரிவினர் நடாத்தும், கலை நிகழ்ச்சிகளான நவாலியூர் சி என் செல்லத்துரையின் ''சுதந்திரப்போர் வெல்லும்'' என்ற நாடகமும், புதுவை அன்பன் நா. செல்வம் அவர்களின் '' அவலங்கள் '' என்ற நாடகமும், இன்று

## மீட்புநிதி

பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மாலை 2.00 மணி தொடக்கம் 3 00 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி சங்கத்தானை

சரவெட்டி, பருத்தித்துறை. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மாலை 4 00 மணி தொடக்கம் 5.00 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

## சளுத்துறை

வல்வெட்டித்துறை. டேவிற் ஜீவராஜா அல்வாய் மேத்கு. வன்சன்டி போல் குருநகர், குவேந்திரன் தாளையடி, தாவுடன் குருநகர் சிவபாதன் ராசாவின் தோட்டம், சௌந்தர ராஜா அரசடிவீதி. வண்ணார் பண்ணை, மணிநாதன் கொக்குவில், ராஜகுலசிங்கம் கொக்குவில், செல்வசோதி கரவெட்டி, அருள்முருக சோதி இணுவில், ஆனந்தராஜா சுன்னாகம். அருள்குமார் வல்வெட்டித்துறை, நாவுக்கரசு சுதுமலை தெற்கு, செபஸ்தியாம்பிள்ளை கொக்குவில், குமாரதாசா ஆனைக்கோட்டை, சிவசுப்பிரமணியம் சுதுமலைதெற்கு, யோகராஜா மானிப்பாய், சண்முகராஜா வெள்ள வாய்க்கால். வல்வெட்டித்துறை, அன்பழகன், நந்தாவில் கொக்குவில், சற்குணராஜா வியாபாரிமூலை, அன்ரன் குருநகர், அற்புதராஜா பருத்தித்துறை, ராஜீ நயினாதீவு, குலசிங்கம் கம்பர் மடம், குலசேகரம் பருத்தித்துறை.

ஈழநாதம்

மக்கள் தினசரியின்

மற்றுமொரு சேவை

உங்கள் விளம்பரங்களுக்கு

தேவையான புளொக்குகள்

உடனுக்குடன் தயாரித்து தரப்படும்

அழகன்

புளொக் தயாரிப்பாளர்கள்

27/7, மகேந்திரா வீதி,

யாழ்ப்பாணம்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 21 — 11 — 1965



அம்பிகையின் அடியில் 9 — 1 — 1992

நயினாதீவு 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த

**சண்முகநாதன் தனஞ்செயராசா [தவம்]**

(முன்னாள் முகாமையாளர் L P. T. ஸ்தாபனம் இல. 21, சென் ஜோன்ஸ் றோட் கொழும்பு-11)

திதி: 29-12-1992

மணக்கோலம் பூண்டு வருடம் இரண்டாகுமுன்பே
மலர் ரதம் ஏறி மாயவன் அடி சேர்ந்தவரே!
திடீர் அழைப்பொன்று உமைத்தேடிவந்து
கனடா பயணமானீர், பாதிவழியில் காலன் கவர்ந்தானே
ஆசையோடு வளர்த்த மகள் அந்தரித்து இங்கிருக்க
சூல்கொண்டு வளர்ந்த மகள் கேடுகிறாள் அப்பாவை
அணைத்து மகிழ்ந்திட அன்னையெம் மோடிருந்தும்
இணைந்து வாழ்ந்திட இல்லையே எம்தந்தை
பெற்ற தாய் பரிதவிக்க, உடன் பிறந்தோர் துடிதுடிக்க
மருகரின் பிரிவு கேட்டு அன்புமாமி ஏங்கியழ
ஆசை மாமா வென அழைத்த மருமக்களும்
மைத்துனர்மார், மைத்துனிமார், உற்றார் உறவினரும்
கதறியழப் பறந்தோடி மறைந்ததெங்கே?

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீழாத் துயில் கொண்ட அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூஷணி அம்பிகையை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்,

அன்புத் தாயார், அன்பு மனைவி பிள்ளைகள், மாமி, சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்.

63/1, கே கே. எஸ். வீதி, கொக்குவில்.

(3877)

## நெஞ்சினில் நிலையான 30-ம் நாள் நினைவாக...

30-11-92 அன்று யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் வீரச்சாவடைந்த

கப்டன் முகுந்தனுக்கு (கிர்மானி)

**வீரவணக்கம்**



மக்கள் தினசரியின்

## மற்றுமொரு சேவை

உங்கள் விளம்பரங்களுக்கு

தேவையான புளொக்குகள்

உடனுக்குடன் தயாரித்து தரப்படும்

# அழகன்

## புளொக் தயாரிப்பாளர்கள்

27/7, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

## மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம்

31 - 12 - 1992 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற விருந்த மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம், தவிர்க்க முடியாத காரணங்களால் பின் போடப்பட்டுள்ளது.

அடுத்த கூட்டம் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஒப்பம்:
கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்
28-12-92

வி. செ. சுவாமிநாதன்
திட்ட மிடல்
பிரதிப்பணிப்பாளர்.

(சி/5668)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்

15 - 08 - 1932



ஆண்டவன் அடியில்

29 - 11 - 1992

## திருவாட்டி தெய்வானை சிவப்பிரகாசம்

[அல்லைப்பிட்டி]

மகளாய், மங்கையாய், தாரமாய், துணையாய் மந்திரியா யரசியாய், வையத்தில் நிறைதாயாகி வாழ்வளித்த தெய்வத்தின் நிறைவான வஞ்சலியில் நீ விரும் கலந்துறவாட அன்புரிமையாயழைக்கிறோம். வருக! வருக!!

இவரின் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்

397, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(3876)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

புத்துறை இந்துமகாவித்தியாலய கல்வி வளர்ச்சிக் கழக வகுப்புக்கள் [ஆண்டு - 5 தொடக்கம் ஆண்டு-11 வரை] 30.12 92 புதன்கிழமையில் இருந்து நடைபெறும் என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ். கல்விக்கோட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

## கலை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் யாழ். மாவட்டப் பிரிவினர் நடாத்தும், கலை நிகழ்ச்சிகளான நவாலியூர் சி என் செல்லத்துரையின் ''சுதந்திரப்போர் வெல்லும்'' என்ற நாடகமும், புதுவை அன்பன் நா. செல்வம் அவர்களின் '' அவலங்கள் '' என்ற நாடகமும், இன்று மாலை 3.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்,

## கிராமசேவையாளர் கலந்துரையாடல்

பளை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 10-00மணிக்கு பளை உதவி அரச அதிர் அலுவலகத்தில் நடைபெறும்.

...வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் பாடசாலை மாணவர் சீருடை, இலவசப்புத்தகம் விநியோகிப்பது பற்றித் தெரிவிக்கவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது சமுகம் தரும்வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### மீட்புநிதி

பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மாலை 2.00 மணி தொடக்கம் 3 00 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி சங்கத்தானை

கரவெட்டி, பருத்தித்துறை. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மாலை 4 00 மணி தொடக்கம் 5.00 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

### வீரச்சாவு

திருந்த விடுதலைப் புலிகள் போராளி 2ம் லெப்டினன்ட் கதிர் (ஞான குருபரன்-சுதர்சன் - சித்தன்கேணி வட்டுக்கோட்டை) நேற்றைய தினம் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த இவ் இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி இராசம்மா

(வேலணை - 1, புங்குடுதீவு -7)

மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வேலணை 1ஆம் வட்டாரம் (சாட்டி வீதி, தாழிபுலச்சந்தி). 7ஆம் வட்டாரம் புங்குடுதீவு மடத்துவெளி ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்பொழுது இல, 21, நடராசா வீதி, குளப்பிட்டியில் வசித்தவருமான திருமதி கந்தசாமி இராசம்மா 28-12-92 இல் காலமானார். இவர் காலம் சென்ற மாணிக்கம் கந்தசாமியின் அன்பு மனைவியும், காலம் சென்ற விநாயகமூர்த்தி மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் (மண்டைதீவு 4) தவேந்திரராசாவின் (முன்னாள் லங்கா, சீமெந்து லிமிட்டெட் உத்தியோகத்தர் தற்பொழுது கனடாவில் தொழில் புரிபவர்) அன்புத்தாயாரும், த பாலசுலோசனாவின் அன்பு மாமியாரும், விசாலாட்சி, பங்களம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலம் சென்ற கணபதிப்பிள்ளை, குலசேகரம்பிள்ளை, (வேலணை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனுசியா, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பரராசசிங்கம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் (புங்- மடத்துவெளி) அன்புச் சம்பந்தியும், திரு. ப. கனகலிங்கம் (தலைவர் - புங். நயி. பல நோ. கூ. சங்கம்) திருமதி ந பாலசரஸ்வதி, திரு. யோகேஸ்வரன் (கனடா), நிதீஸ்வரன் (கனடா), நதீஸ்வரன் (கனடா), பானுரேகா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் மேற்படி இல்லத்தில் இன்று [29-12-92] ந ப. 12 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

இல, 21, நடராசா வீதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில் மேற்கு.

திரு. ப. கனகலிங்கம்
(மருமகன்)
தலைவர்- புங். நயி.பல நோ. கூ. ச

[3875]

சௌந்தரராஜா அரசடிவீதி, வண்ணார்பண்ணை, மணிநாதன் கொக்குவில், ராஜகுலசிங்கம் கொக்குவில், செல்வசோதி கரவெட்டி, அருள்முருகசோதி இணுவில், ஆனந்தராஜா சுன்னாகம். அருள்குமார் வல்வெட்டித்துறை, நாவுக்கரசு சுதுமலை தெற்கு, செபஸ்தியாம்பிள்ளை கொக்குவில், குமாரதாசா ஆனைக்கோட்டை, சிவசுப்பிரமணியம் சுதுமலைதெற்கு, யோகராஜா மானிப்பாய், சண்முகராஜா வெள்ளவாய்க்கால். வல்வெட்டித்துறை, அன்பழகன், நந்தாவில் கொக்குவில், சற்குணராஜா வியாபாரிமூலை, அன்ரன் குருநகர், அற்புதராஜா பருத்தித்துறை, ராஜீ நயினாதீவு, குலசிங்கம் கம்பர் மடம், குலசேகரம் பருத்தித்துறை.

### புதிய

கின்றன.

இத்திட்டத்தில் டாங்கிகள், கவச வாகனங்கள் மற்றும் விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் என்பன முக்கிய பங்குவகிக்க இருப்பதாகத் தெரியவருகிறது. இதன் பிரகாரம், விடுதலைப்புலிகளை கிட்டநெருங்கி மோதுவதை விட தூரத்தில் இருந்தே பெரும் சேதத்தை ஏற்படுத்தி விடுவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் திட்டத்திற்கென பெரும் தயாரிப்பு நடவடிக்கைகளில் இராணுவம் இறங்கியுள்ளது. இதற்கென இளநிலை அதிகாரிகளுக்கு தீவிர பயிற்சிகள் அளிக்கப்படுவதோடு. டாங்கிகள், கவச வாகனங்கள் என்பன குறித்தும் தீவிர கவனம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இதே வேளை, ஆர்ஜென்ரீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட 'புக்காரா விமானங்கள் பாவனைக்கு வந்தவுடன் விமானத்தாக்குதல்களும் மேலும் அதிகரிக்கப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பட்டதாரி

தவறிவிட்டனர்.

கொழும்பு சென்று திரும்பிய யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. பத்மநாதன் கல்விச்சேவை ஆணைக்குழு அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது இப்பட்டதாரிகளின் நிலை குறித்து எடுத்துக் கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து கல்விச் சேவைகள் ஆணைக்குழு அதிகாரிகள் மேற்படி பயிற்சியைத் தவறவிட்டவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இப்பயிற்சிக்கான திகதி குறித்து மிக விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரியவருகிறது.

(3877)

## நெஞ்சினில் நிலையான 30-ம் நாள் நினைவாக...

30-11-92 அன்று யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த

கப்டன் முகுந்தனுக்கு (கிர்மானி)

### வீரவணக்கம்



### கப்டன் முகுந்தன் (கிர்மானி)

[பிரான்சிஸ் றொபேட், வின்சன் குருநகர்]

அஞ்சிடாதென்றும் அனலிடை புகுந்து
ஆடிய நண்பனே! உன்னை
நெஞ்சினில் நாங்கள் நினைவெனச் சுமப்போம்
நிதமும் உன்முகம் காண்போம்
வெஞ்சமர் கனத்து வேங்கையே! நாளை
வென்றிடும் தாயகப் போரில்
எஞ்சிய பேர்கள் உன்பெயர் தன்னை
எழுதுவர் நினைவிலே வாழ்வாய்
இந்த மண் உன்னை மறக்காது
உன்னை எம நெஞ்சம் இழக்காது

சி-5669)

- நண்பர்கள்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 28.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7335

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்,

26-5777, 27-3803, 27-8879, 24-5137, 42-1182, 26-1602, 26-2941, 41-7420, 24-6279, 26-0375, 24-6941, 24-5121, 24-9967, 41-1996, 27-2761, 24-6168, 26-7217, 42-0970, 42-1722, 24-6448, 28-8951, 28-8229, 24-6475, 24-9597, 42-3815, 27-7750, 26-5782, 28-9917, 42-3495, 27-6769, 24-9825, 24-6243, 26-0767, 24-4491, 28-0940, 24-6646 43-1857, 24-0098

வட பகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

41-0976, 26-5517, 22-6746, 26-1349, 27-1122, 42-2862, 24-4390, 24-6342, 22-4473, 26-3068, 26 7663 26-3741, 26-6775, 27-6583, 24-1040, 26-8051 24-5734, 27-4465, 24-5721, 26 5576 27-9404, 26-3410, 22-7003, 42-1721, 26-4393